# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 12 DECEMBER-2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# நான் உன்னோடு இருக்கிறேன்


# Merry Christmas

உங்கள் அனைவருக்கும்
இயேசு வாழ்கிறார் ஊழியத்தின் சார்பாக

# இனிய கிறிஸ்துமஸ்
# வாழ்த்துக்கள்

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். நாம் கடந்து வந்த எல்லா வழிகளிலும், நாம் கடந்து வந்த எல்லா ஜனங்களுக்குள்ளும் நம்மைக் காப்பாற்றினவர் நம்முடைய தேவனாகிய கர்த்தர் தாமே. யோசுவா 24:17 —ல் சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி கர்த்தர் இந்த 2022-ஆம் ஆண்டு முழுவதும் நம்மை கிருபையாய் நடத்தி வந்தார். எத்தனை போராட்டங்கள், இழப்புகள், வேதனைகள், கொடிய கொள்ளை நோயின் தாக்கம் இருந்தாலும் கர்த்தர் நம்மை கண்மணி போல காத்தார் அவருக்கே மகிமை உண்டாவதாக. கடந்த அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற சுவிசேஷ பயிற்சிப் பள்ளியில் ஏறக்குறைய 53 பேர் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டார்கள். சகோதரர். வின்சென்ட் செல்வகுமார், சகோதரர். வெஸ்லி மேக்ஸ்வெல், பாஸ்டர். ஜான்.கே, பாஸ்டர். ராஜாசேகர், சகோதரர். ஜான் நல்லமுத்து மற்றும் டாக்டர். செல்வின் இன்னும் பலர் கலந்து கொண்டு பயிற்சி அளித்தனர். சுவிசேஷ பயிற்சிப் பள்ளியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று சென்ற ஒரு சகோதரி அடுத்த வாரத்தில் சுவிசேஷ ஊழியம் செய்ய சென்ற போது தன்னுடைய சிறுவயதிலேயே தகப்பனும், தாயும் பிரிந்து விட்டதால் தகப்பன் முகம் பார்க்காத அந்த சகோதரி, ஒரு வீட்டிற்குச் சென்று சுவிசேஷம் அறிவித்த போது அந்த தகப்பனார் பெயர், மற்றும் சொந்த ஊர் எல்லாவற்றையும் விசாரித்த போது அவர் தன் அப்பா என்று அறிந்து, தான் அவருடைய மகள் என்பதை அவருக்கு விளக்கிச் சொல்லி தகப்பனாரும், மகளும் ஒப்புரவாகி, குடும்பம் ஒன்று சேர்ந்ததை சாட்சியாக அறிவித்தார்கள். சுவிசேஷம் பிரிந்த மனிதனையும், குடும்பத்தையும் எப்படி இணைக்கிறது பாருங்கள். இப்படி நாமும் சுவிசேஷ ஊழியம் செய்யும் போது தான் பிரிந்த குடும்பங்கள் இணைக்கப்படும். தொடர்ந்து வானத்தின் வாசலில் நடைபெற்ற உபவாச ஜெபம், மதுரையில் நடந்த எழுப்புதல் உபவாச ஜெபங்கள் எல்லாம் மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. மேலும் கர்த்தாவே என்னை கைதூக்கி விடும், இயேசுவை தினம் பார்ப்போம், சுவிஷே ஒளி என்ற நமது youtube நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்து நடத்தவும், திரளான மக்கள் நிகழ்ச்சியைப் பார்த்து இரட்சிக்கப்படவும், இன்னும் தேவ பெலத்தோடு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். இந்த மாதம் முழுவதும் கர்த்தருடைய பாதத்தில் காத்திருக்க தேவன் கிருபை செய்திருக்கிறார். தொடர்ந்து உங்கள் ஜெபத்தாலும், காணிக்கையினாலும் இந்த ஊழியத்தை தாங்க மறவாதிருங்கள். கர்த்தர் உங்களுக்குப் போதுமானவராக இருந்து ஆசீர்வதித்து உங்களை நடத்துவாராக.



இயேசுவின் பணியில்,

L. Vincent Raj

(சகோ.L.வின்சென்ட்ராஜ்)



# நீ பயப்படாதே நான் உன்னோடு இருக்கிறேன்

*சகோ.L.வின்சென்ட்ராஜ்*

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வருடத்தின் கடைசி மாதத்தில் வந்திருக்கிறோம். பயங்கரமான பாதைகள், நாசமோசங்கள் நமக்கு வந்தபோதும் நம் கூட இருந்தவர் ஆண்டவராகிய இயேசு ஒருவரே. அவருடைய பெயரே, நாமமே இருக்கிறவராகவே இருக்கிறேன் என்றார். தலைமுறை தலைமுறையாக என்னுடைய நாமம் இதுவே என்றார். இன்றைக்கு இந்த உலகத்தில் எத்தனையோ மனிதர்கள் தோன்றினார்கள். நாங்கள் இந்த உலகத்தில் பெலவான்கள், நிரந்தரமானவர்கள், எங்களை யாரும் அசைக்க முடியாது என்றார்கள். தங்களை தேவன் போல் உயர்த்திக் கொண்டு, கடவுளைப் போல் நடித்துக் கொண்டு ஜனங்களை ஏமாற்றி வஞ்சித்தார்கள். ஆனால் இருக்கின்ற இடம் தெரியாமல் போனார்கள். இன்றைக்கு நாம் பின்பற்றுகிற தேவன் உயிரோடு இருக்கிறார். வேதம் சொல்லுகிறது வெளி 1:18-ல் மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்றார். மத் 28:20-ல் இதோ, உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் நான் உன்னுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆம் பிரியமானவர்களே, அவர் இருக்கிறவர், இருந்தவர், இனிமேல் வரப்போகிறவர் என்றார். அவர் இந்த பூமியில் வாழும் மனிதர்களோடு வாழ்வதற்காகத்தான், அவர்கள் கூட இருப்பதற்காகத்தான், நம் மேல் வைத்த அன்பினால் நமக்குள்ளே வாசம்பண்ண,

நம் கூட இருக்க இம்மானுவேல் என்ற பெயரோடு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு இருக்கிறார், தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம் மத் 1:23. உலக மனிதர்கள் சொல்லுவார்கள் கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்று. அவர் ஜீவனுள்ள தேவன், எந்த மனிதனுக்குள் ஜீவன் இருக்கிறதோ, எந்த மனிதனுடைய ஆத்துமாவில் ஜீவன் இருக்கிறதோ அவர்களோடு தான் இருப்பார். அதனால் தான் அவர் இம்மானுவேல் என்று வேதம் நமக்குச் சொல்லுகிறது. இதைத்தான் உலகம் முழுவதும் டிசம்பர் மாதம் 25-ஆம் தேதியில் கிறிஸ்துமஸ் தினம் என்று கொண்டாடுகிறார்கள். எனக்கு அருமையானவர்களே பல வேளைகளில் நாம் கலங்கி பயந்து தேவன் மேல் நம்பிக்கை வைக்க முடியாமல் எனக்கு அது இல்லையே, இது இல்லையே, வருமானம் இல்லையே, தொழில் இல்லையே, எனக்கென்று யார் இருக்கிறார்கள்?, கூடப்பிறந்தவர்கள் இல்லையே என்று புலம்பலாம், குறைவுபட்டுக் கொள்ளலாம். நீங்கள் பயப்படாதிருங்கள் நான் இருக்கிறேன். பயப்படாதிருங்கள் நான் உங்களைப் பார்த்துக்கொள்வேன் என்றார். நமக்குப் பூமியிலே ஆயிரம் பேர் இருப்பதைக் காட்டிலும் இயேசு நம்மோடு இருப்பதுதான் நமக்கு மேன்மை. நீங்கள் தனிமையில் இருக்கின்றீர்களா?, என் சூழ்நிலைகள் யாருக்கும் தெரியாது என்று மனதிலே குமுறிக் கொண்டிருக்கிறீர்களா? நான் தனிமனிதன் வீட்டில் உள்ள பொறுப்பு எல்லாம் என் தலைமேல் தான் விழுந்திருக்கிறது, நான் மிகவும் நெருக்கப்படுகிறேன் என்று சொல்லுகிறீர்களா? பயப்படாதிருங்கள் நான் இருக்கிறேன் என்று ஏசாயா 41:10-ல் சொன்னவர் இன்றைக்கும் உங்களோடு இருக்கிறார். பழைய ஏற்பாட்டிலே யோசேப்பு என்ற தேவ மனிதன் இருந்தார். அவன் கூட பிறந்த சகோதரர்கள் அவன் தகப்பன் அவர் மேல் அன்பாயிருக்கிறார் என்று பொறாமைக் கொண்டு, எரிச்சல் அடைந்து அவனை உயிரோடே ஒரு பாழ்கிணற்றில் தள்ளிவிட்டார்கள். அதில் ஒருவன் இரக்கப்பட்டு அவனை தூக்கி எடுத்து, எகிப்தியருக்கு அடிமையாக விற்றுவிட்டார்கள். அங்கும் அவனுக்கு வேதனைகள் தான். பொய்குற்றம் சுமத்தப்பட்டு சிறைச்சாலையில் தள்ளி விட்டார்கள். கேப்பாரற்று அந்நிய தேசத்தில் அனாதையாக இருந்த போது தான் கர்த்தர் அந்த சிறைச்சாலையில் அவன் கூட இருந்து அவனைத் தேற்றி, ஆறுதல்படுத்தி எல்லா உபத்திரவங்களிலிருந்து அவனைத் தப்புவித்தார். வேதம் சொல்லுகிறது அப் 7:10-ல் தேவனோ அவனுடனே கூட இருந்து எல்லா உபத்திரவங்களினின்றும் அவனை விடுவித்து, எகிப்தின் ராஜாவாகிய பார்வோன் சமூகத்திலே அவனுக்கு கிருபையும், ஞான-த்தையும் அருளினார். அந்த ராஜா அவனை எகிப்து தேசத்திற்கும், தன் வீட்டைனத்திற்கும் அதிகாரியாக ஏற்படுத்தினார். எந்த இடத்தில் அவமானப்பட்டு தலைகுனிந்து ஒடுக்கப்பட்டாரோ அதே இடத்தில் ஆண்டவராகிய தேவன் அவனோடே கூட இருந்து அவன் தலையை உயர்-த்தினார். அவனை நிந்தித்து அவமானப்படுத்தியவர்களுக்கு முன்பாக பெயரும், புகழும் வரும்படி, மேன்மை வரும்படிச் செய்தார். அந்த தேவன் இன்றைக்கும் உயிரோடு இருக்கிறார், உனக்காகவே இருக்கிறார். அன்றைக்கு யோசேப்புக்கு நன்மை செய்து நிந்தையையும், அவமானத்தையும் மாற்றினவர், இன்றைக்கு உன் கூட இருந்து உனக்கும் அப்படிச் செய்வார். வேதம் சொல்லுகிறது எபிரே 13:8-ல் அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் உன் கூட இருந்து உன்னைத் தப்புவித்து, இரட்சித்து ஜெயம் தந்து, எவர்கள் உனக்கு விரோதமாய் இருக்கிறார்களே அவர்கள் உன் பட்சமாய் வர உதவி செய்வார். உன் துக்க நாட்கள், உன் துயரத்தின் நாட்கள் இந்த டிசம்பர் மாதத்தோடு முடிவடையும்படிச் செய்வார். பயப்படாதே, நான் இருக்கிறேன் என்றவர், அவர் உன் கூட இருந்து உன்னை கரை சேர்ப்பார். உனக்கு குறித்திருக்கிறதை எல்லாம் நிறைவேற்றுவார். போகட்டும் எப்படியெல்லாம் தேவன் நம்மோடு இருக்கிறார், எங்கு எல்லாம் இருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

> “நம் மேல் வைத்த அன்பினால் நமக்குள்ளே வாசம்பண்ண, நம் கூட இருக்க இம்மானுவேல் என்ற பெயரோடு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு இருக்கிறார், தேவன் நம்மோடு இருக்கிறார் என்று அர்த்தமாம்”

# மரண இருளின் பள்ளத்தாக்கிலே நம்மோடு இருக்கிறார்

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் சங் 23:4. பயப்படாதே இருக்கிறேன் என்றவர் எங்கே? எப்படி? எல்லாம் நம்மோடு இருக்கிறாராம், மரண இருளின் பள்ளத்தாக்கிலே நாம் நடக்கும் போது தேவரீர் என் கூட இருக்கின்றீர். மரண இருளில் இருந்த சவுல் ராஜாவும், இஸ்ரவேல் ஜனங்களும் நாற்பது நாள் கோலியாத்தால் மிரட்டப்பட்டார்கள், பரியாசம் பண்ணப்பட்டார்கள், தங்கள் எதிரிகளால் நிந்திக்கப்பட்டார்கள். இப்படி மரண பயத்தில் இருந்த இஸ்ரவேல் ஜனங்களையும், சவுல் ராஜாவையும் பார்த்து தாவீது இவன் பொருட்டு யாரும் கலங்க வேண்டியதில்லை நான் அவனை கொன்று போடுவேன் என்று சொல்லி, தன் உயிரையும் பொருட்படுத்தாமல் கோலியாத்தை வீழ்த்தினான். இந்த ஒரே காரியத்திற்காக தாவீது சவுலால் பகைக்கப்பட்டார், வெறுக்கப்பட்டார். காரணம் ஜனங்கள் சவுல் ராஜாவைவிட தாவீதை மிகவும் நேசித்தார்கள். இதின் நிமித்தம் சவுல் பலமுறை தாவீதை ஈட்டியால் குத்தவும், சவுலால் வீட்டை விட்டு, தேசத்தை விட்டு துரத்தப்பட்டார். ஓர் இடத்தில் அவர் சொல்லுகிறார் மரணத்திற்கும் எனக்கும் ஒரு அடி தூரம் தான் இருந்தது என்று. தப்புவேனா, பிழைப்பேனா என்ற துயரத்தின் பாதையில் போகும் போது தான், அவர் தேவனை நோக்கி முறையிடுகிறார். தேவனே எனக்கு இரங்கும் நான் ஆடு மேய்த்த போதுதான் கொடிய மிருகங்களின் கையில் சிக்கினேன். ஒருவிசை கரடியும், ஒரு விசை சிங்கமும் என்னைக்கொன்று போட வந்தது அவைகளிலிருந்து எல்லாம் நீர் என்னைத் தப்புவித்து காப்பாற்றினீர். இனி பிரச்சனை இல்லை நான் வீட்டிற்கு வந்து விட்டேன் என்று நினைத்தால் அந்த காட்டில் உள்ளமிருகங்களிலும் கொடிய மனிதன் இங்கே இருக்கிறான். சவுல் மாத்திரமல்ல அவன் சேவகரும், அடியாட்களும் என்னைத் துரத்துகிறார்கள். ஒரு மிருகத்தை வேட்டையாடுவதைப் போல் என்னை வேட்டையாடுகிறார்கள் என்று மரண இருளின் பள்ளத்தாக்கிலிருந்து தேவனை நோக்கி கூப்பிட்டார். அப்பொழுது தேவன் தாவீதை நோக்கி நீ பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன், ஒரு வழியாய் உனக்கு விரோதமாய் வருகிறவர்கள் ஏழு வழியாய் சிதறிப்போவார்கள். உன்னை தப்புவிக்கவும், இரட்சிக்கவும் நான் உன்னோடே இருக்கிறேன் என்றார். இன்றைக்கு உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் கொள்ளை நோய்களைக் குறித்த பயத்தோடும், திகிலோடும், மரண பயத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்து வேதனைப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பையும், விடுதலையையும் தரத்தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். நான் இம்மானுவேலராய் உங்களோடு இருப்பேன் என்றார். அவர் முதலாவது தேவாலயத்தில் பிரசங்கம் செய்கிற போது ஆலயத்தில் சொன்னார் மத் 4:15-ல் இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள், மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது



என்றார். இன்றைக்கு அந்த இயேசு நம்மோடு இருந்தால் நம் தனிமையில், மனிதர்களால் அல்லது மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் நம்மை எந்த இருளும் நெருங்காமல், சூழ்ந்து கொள்ளாமல் நம்மை பாதுகாப்பார். அதற்குத்தான் அவர் இருக்கிறவராகவே இருக்கிறேன் என்றார். அந்த தேவன் உங்களோடிருந்து எல்லா மரண .

கண்ணிக்கும், மரண பயத்திற்கும் விலக்கி நம்மை பாதுகாப்பார். அதனால் தான் தாவீது தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர் நான் பொல்லாப்புக்கு பயப்படமாட்டேன் என்றார். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களோடிருப்பாராக

## ஜீவனாய் இருக்கிறேன் என்றார்

நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் யோவான் 14:6. இருக்கிறவராகவே இருக்கிறேன் என்றவர் அடுத்து அவர் நமக்கு ஜீவனாக இருக்கிறார். யோவான் 1:4 சொல்லுகிறது அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது என்று சொல்லப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல 1 யோவான் 5:12-ல் குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் என்று சொல்லப்பட்டுள்ளது. வேதம் சொல்லுகிறது பாவம் செய்கிற ஆத்துமா சாகும். பாவங்களினாலும், அக்கிரமங்களினாலும் மரித்தவர்களாய் இருந்த நம்மை உயிர்ப்பித்தார் என்று எபே 2:1 சொல்லுகிறது. இன்றைக்கு அநேகர் ஜீவன் இல்லாமல், தேவனோடு தொடர்பு இல்லாமல், அவருடைய பிரசன்னத்தை அனுபவிக்க முடியாமல், அவருக்கு முன்பாக நிற்க முடியாமல், செயல் இழந்தவர்களாக எந்த ஒரு நற்கிரியைகளையும் செய்ய முடியாதவர்களாக, தேவன் நம்மை உண்டுபண்ணின நோக்கத்தை மறந்து சித்தத்தை மறந்து பலவீனரும், உயிரற்றவர்களுமாய் இருக்கிறோம். இப்படிப்பட்ட ஜீவனற்ற நிலையில் வாழுகின்ற நமக்கு ஜீவனாய் இருக்கத்தான் இயேசு சொன்னார் யோவான் 11:25-ல் நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்றார். செயல் இழந்த ஒரு உறுப்பு முதலில் என்னவாகும்? அது கோமாவில் இருக்கும் நாளடைவில் அது பழுதடைந்து மரித்து விடும். இப்படியாகத்தான் நம்முடைய ஆத்துமாவும் இருக்கிறது. ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் பிலிப்பியர் 1:21-ல் கிறிஸ்து எனக்கு ஜீவன் என்று. அவர் நமக்குள் இருந்தால் நாம் பரலோக ராஜ்ஜியத்தில் ஜீவனுடையவர்கள். சங் 27:1-ல் தாவீது சொல்லுகிறார் கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர் என்று.அவர் உங்களுக்குள் இருந்து உங்களை வழிநடத்தினால் உங்களால் சொல்ல முடியும் தேவன் எனக்கு ஜீவனாயிருக்கிறார் என்று. இருக்கிறவராகவே இருக்கிறேன் என்றவர் நமக்கு ஜீவனாய் இருக்கிறார். மட்டுமல்ல நம்முடைய சரீரத்திற்கும் ஜீவனாய் இருக்கிறார். வேதம் சொல்லுகிறது மத் 26:41-ல் மாம்சமோ பலவீனமுள்ளது என்றும், ரோமர் 6:10,11 சொல்லுகிறது கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தின் நிமித்தம் மரித்ததாயும் ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார் என்று சொல்லப்பட்டுள்ளது.

சாவுக்கேதுவான சரீரங்கள், கொடிய கொள்ளை நோய்கள், விஷ கிருமிகளால் ஜனங்கள் பாதிக்கப்படுகிறார்கள். வேதாகமத்தில் யோபு என்ற பக்தன் இப்படியாகத்தான் கொடிய வியாதியினால் பாதிக்கப்பட்டான். சரீரமெல்லாம் கொடிய புண்கள் மட்டுமல்ல சில பகுதிகள் அழுகி கெட்டுப் போய்விட்டது. அந்த நாட்களில் மருத்துவரோ, மருத்துவமனையோ இல்லை, எவ்வளவு வலியில் துடித்திருப்பார். தூக்கமில்லை, கூட இருந்தவர்களால் பரியாசம் பண்ணப்பட்டார். இப்படிப்பட்ட நிலையில் தான் தேவன் மேல் நம்பிக்கை வைத்து விசுவாசத்தோடு சொன்னார் என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்று. யோபு 19:25. இதனுடைய அர்த்தம் என்ன?, நான் பின்பற்றுகிற தேவன் ஜீவனோடிருக்கிறார். உயிரோடிருக்கிறார். ஆகவே அவர் என்னையும் உயிரோடு காப்பாற்றுவார், அவர் உயிரோடு இருக்கிறார் என்றார். தேவன் அவரை காப்பாற்றினாரா? ஆம் அவர் விசுவாசத்தின்படி, நம்பிக்கையின்படி நல்ல பெலத்தையும் சுகத்தையும் தந்து சாவுக்கேதுவான சரீரங்களை உயிர்ப்பித்து அவருக்கு ஜீவனாய் இருந்தார். ஆகவே தான் அவரால் சொல்ல முடிந்தது என் மீட்பர் உயிரோடு இருக்கிறார் என்று. கேன்சர் வியாதிக்கு சிகிச்சை அளிக்கும் ஒரு மருத்துவரின் சாட்சியை கேட்டேன். அவர் அந்த கொடிய கிருமிகள் தாக்கப்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த போது இவர்கள் பிழைக்க மாட்டார்கள் இன்னும் 1 வருடம் தான்

உயிரோடிருப்பார்கள் என்று தன்னுடைய மருத்துவ படிப்பின்படி கணித்துவிடுவார். அப்படிப்பட்ட சிலரை அவர் பல வருஷங்களுக்கு பிறகு உயிரோடு பார்த்து பிரமித்துப் போனார். நீங்கள் எப்படி உயிரோடு இருக்கிறீர்கள் என்றார். எல்லாம் கடவுளின் கிருபை. ஜெபத்தோடு சில பச்சிலைகளைச் சாப்பிட்டேன் தேவன் என்னை சுகமாக்கினார் என்றார்கள். மனிதர்கள், மருத்துவர்கள் நம்மைக் கைவிட்டாலும் தேவன் நம்மை கைவிடாதவராய் இருக்கிறார். மட்டுமல்ல தானியேல் 3:17-ல் ராஜாவின் கோபத்தினால் நெருப்புச் சூளையில் தள்ளப்பட்டார்கள் மூன்று வாலிபர்கள், தேவன் அவர்களோடு இருந்தபடியால் ஒரு சேதமும் இல்லாமல் ராஜாவைப் பார்த்து சொன்னார்கள் நாங்கள் ஆராதிக்கின்ற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராய் இருக்கிறார் என்று. ஒரு சேதமும் இல்லாமல் உயிரோடு பாதுகாக்கப்பட்டார்கள். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே ஏதோ ஒரு வியாதி, ஏதோ ஒரு பலவீனம், ஏதோ ஒரு சாத்தானின் போராட்டத்தில் நீங்கள் செத்து மடிபவர்களைப் போல காணப்படலாம். இதினிமித்தம் நீங்கள் கலங்கிப் பயந்து ஒவ்வொரு மருத்துவராகப் பார்த்து,



அலைந்து பணத்தை செலவழித்தும் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாமல் இருக்கலாம் பயப்படாதிருங்கள் நான் இருக்கிறேன். தலைமுறை தலைமுறையாக என்னுடைய நாமம் இருக்கிறவராகவே இருக்கிறேன் என்றவர் உங்கள்கூட இருந்து பலத்த அற்புதங்களைச் செய்யப் போகிறார். சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார். உங்கள் எந்த வியாதியாக இருந்தாலும் அவரால் குணமாக்க, சுகமாக்க, ஜீவனைக் கொடுக்க முடியும், உயிர்ப்பிக்க முடியும். இயேசு சொன்னார் யோவான் 11:4-ல் இந்த வியாதி மரணத்திற்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது என்றார். எப்படி லாசருவுக்கு ஜீவனாயிருந்து உயிரோடு எழுப்பினாரோ அந்த தேவன் உங்களுக்கும் இரங்கி ஜீவனாய் இருப்பார். அவர் உங்களை உயிரோடு காப்பார்.

**சாந்தமாக, மனத்தாழ்மையாக, பணிவிடைக்காரனாக மற்றும் அன்பாகவே இருக்கிறார்.**

நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் மத் 11:29. இருக்கிறவராகவே இருக்கிறேன் என்றவர், மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்த போது நம்மோடு இருந்தார், அடுத்து நமக்கு ஜீவனாய் இருந்தார், அடுத்ததாக நான் மனத்தாழ்மையாக இருக்கிறேன் என்றார். வெளிவேடத்தில் ஒருவேளை மனிதன் ஆடம்பரம் இல்லாமல் தாழ்மையாக இருப்பதைப் போல் காணப்படலாம், ஆனால் மனதிலே, இருதயத்திலே தாழ்மை இருக்குமா? என்பது தெரியாது. இயேசுவின் வாழ்க்கையைப் பாருங்கள் வானத்தையும், பூமியையும் படைத்த தேவன் கோடான கோடி தூதர்களின் மத்தியில் வாழ்ந்தவர், அவர் சொன்னால் ஆகும், கட்டளையிட்டால் நிற்கும் அப்படிப்பட்ட தேவன் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் வரிசையாக உட்கார வைத்து அவர்கள் கால்களை கழுவவும், துடைக்கவும் தொடங்கினார். யோவான் 13:14-ல் ஆண்டவரும், போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால் நீங்களும், ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள் என்றார். அது தான் மனத்தாழ்மை, இன்றைக்கு இந்த மனத்தாழ்மை இருந்தால் தான் நம்மேல் கிருபை நிலைத்திருக்கும். அப்போஸ்தலனாகிய பவுலின் வாழ்க்கையைப் பாருங்கள் மரித்தவர்களை

உயிரோடு எழுப்பினவர், இயற்க்கைக்கு மேற்பட்ட அற்புதங்களைச் செய்தவர் எப்படி இயேவை பின்பற்றினேன் என்று சொல்லுகிறார் அப் 20:19-ல் வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும், யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும் நான் கர்த்தரை சேவித்தேன் என்றார். அதுமாத்திரமல்ல 2 கொரி 11:25-27-ல்



மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒரு தரம் கல்லேறியுண்டேன், அநேக பிரயாணம் பண்ணினேன், ஆறுகளால் வந்த மோசங்கள் கள்ளரால் வந்த மோசங்கள், என் சுயஜனங்களால் வந்த மோசங்கள் என்று தன்னுடைய பாடுகளைத்தான் மேன்மைப்படுத்துகிறாரே தவிர தான் தன்னுடைய ஊழியத்தில் நடந்த அற்புதங்களைச் சொல்லி தன்னை மேன்மைப்படுத்தவில்லை. அதனால் தான் அவரை கர்த்தர் வல்லமையாய் பயன்படுத்தினார். தேவனைப் பின்பற்றுகிற நம்மிடத்தில் இதைத்தான் எதிர்பார்க்கிறார். வேதத்தை வசித்துப் பாருங்கள் மீகா 6:8-ல் மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார். நியாயஞ்செய்து, இரக்கத்தை சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாக நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார் என்று தன் எதிர்பார்ப்பை நமக்கு சொல்லியிருக்கிறார். இந்த மனத்தாழ்மை ஆபிரகாமுக்கு இருந்தது. தன்னோடு கானானுக்கு வந்த தன் அண்ணன் மகன் லோத்து, ஆபிரகாமின் நிமித்தம் அவன் தொழில், ஆடு, மாடு மந்தை பெருகின போது வேலைக்காரர்களை விட்டு லோத்து வாக்குவாதம் பண்ணினான். இதை தெரிந்து கொண்ட ஆபிரகாம் நாம் சகோதரர் நமக்குள் வாக்குவாதம் வேண்டாம், நீ இடதுபக்கம் போனால், நான் வலது பக்கம் போகிறேன், நீ வலதுபக்கம் போனால், நான் இடது பக்கம் போகிறேன் என்று அவன் கேட்காமலே பொன்விளையும், இடத்தையும் விட்டுக்கொடுத்தான். ஆதியாகமம் 13-ஆம் அதிகாரம் முழுவதும் அப்படிச் சொல்லுகிறது. அவ்வளவு வசதி இருந்தும் பொன் விளையும் பூமி இருந்தும், அதன் பிறகு லோத்தின் வாழ்க்கை சின்னா பின்னமாகி ஒன்றுமில்லாத பரதேசியைப்போல ஆகிவிட்டான். காரணம் பெருமை, அகந்தை, மனத்தாழ்மை இல்லை. ஆனால் ஆபிரகாமோ மனத்தாழ்மையாக தேவனுக்கு முன்பாக நடந்து, பூமி முழுவதையும் சுதந்தரித்து கொண்டு தேவனால் உயர்த்தப்பட்டார். காரணம் அவருக்குள் இருந்த தேவன் மனத்தாழ்மையுள்ளவராக இருந்தபடியால் இவரையும் மனத்தாழ்மையுள்ளவராக மாற்றினார். அது மாத்திரமல்ல ஆண்டவராகிய இயேசு சாந்தமாய் இருக்கிறேன் என்றார். இருக்கிறவ-ராகவே இருக்கிறேன் என்றவர் சாந்தமுள்ளவராக இருக்கிறார். வேதத்தை வசித்துப் பாருங்கள் ஏசாயா 53:7-ல் அவர் நெருக்கப்பட்டும், ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும், அவர் தம்முடைய வாயை திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். அது தான் சாந்தம், இந்த அதிகாரத்தை வாசித்த போது தான் அப்போஸ்தலர் 8-ஆம் அதிகாரத்தில் எத்தியோப்பியா மந்திரி பொருளாதார அமைச்சர் வாசித்து தொடப்பட்டு பிலிப்புவினால் தேவனன்டைக்கு வழி நடத்தப்பட்டார், இரட்சிக்கப்பட்டார். மோசேயின் வாழ்க்கையைப் பாருங்கள் அவன் தேவனை அறியாததற்கு முன்பு ஒரு கோபக்காரன், தன் இனத்தார் யாராவது மற்றவர்களால்

துன்பப்படுத்தப்பட்டால், வேதனைப்படுத்தப்பட்டால் அவர்களை எதிர்த்துப் போராடி கொலை செய்து விடுவார். உதவி செய்பவன் என்ற பெயரிலே கோபவெறியோடு அலைந்தான். ஆனால் கர்த்தர் **அவனை சந்தித்து உன் கையில் இருக்கிற அந்தக் கோலை கீழே போடு, உன் கோபத்தை, பழிவாங்குகிற பழக்கத்தை, குணத்தை, உன் சுபாவத்தை கீழே போடு என்றார் போட்டவுடனே அது பாம்பாக மாறிவிட்டது, அப்போது தான் மோசேக்கு தெரிந்தது இவ்வளவு நாள் பாம்பை சுமந்து வைத்திருக்கிறேன் என்று அதைக் கண்டு விலகி ஓடினான். அதன் பிறகு கர்த்தர் அவனைச் சந்தித்து உடைத்து உருவாக்கி அவனிலும் பலத்த கோபக்காரனாய் இருந்த பார்வோனிடத்தில் அனுப்பி மோசேயை உருவாக்கி எடுத்தார். அதன் பிறகு கர்த்தர் அவரைக் குறித்து சாட்சிக் கொடுக்கிறார்.** எண் 12:3-ல் மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்த குணமுள்ளவனாயிருந்தான். காரணம் தேவன் சாந்தமும், மனத்தாழ்மையுமாக இருந்ததால் மோசேயை சாந்தகுணமுள்ளவராக மாற்றியிருந்தார். இதற்காகத் தான் தேவன் நம்மோடிருக்கிறார். நம்மை உருவாக்கவும், பயன்படுதவும் அவருடைய சாயலாக மாற்றவும் அவர் இருக்கிறார். அதற்கு தான் நான் இருக்கிறவராகவே இருக்கிறேன என்றார். இது தான் அவருடைய நாமம். என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களோடிருந்து உருவாக்கி பயன்படுத்தி அவருக்கு மகிமையாக இந்த பூமியிலே வாழச் செய்வாராக.

“ தவன் சாந்தமும், மனத்தாழ்மையுமாக இருந்ததால் மோசேயை சாந்தகுணமுள்ளவராக மாற்றியிருந்தார். இதற்காகத் தான் தேவன் நம்மோடிருக்கிறார். ”




## முக்கிய அறிவிப்பு !

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகைக் கடந்த 25 வருடத்திற்கு மேலாக அச்சடிக்கப்பட்டு வெளிவந்தது. இப்பொழுது பத்திரிக்கை அச்சடிக்கப்படுவதற்க்கு மட்டும் மாதம்தோறும் ரூ 50,000-க்கு மேல் செலவு செய்யப்படுகிறது. இதனால், வருகிற மாதம் முதல் பத்திரிக்கை அச்சடிப்பைக் குறைத்து **Digital** முறையில் நம்முடைய இணையதளம் **www.jesuslives.in/resoruces** மற்றும் அனைத்து இயேசு வாழ்கிறார் சமூக வலைத்தளங்களில் வெளிவரும் அதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உங்கள் வாட்சப்பில் மாதந்தோறும் பெற 9442800449 என்ற எண்ணிற்கு **"Send Magazine"** என **Type** செய்து அனுப்பினால் மாதந்தோறும் உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பப்படும்.

8TH YEAR JOIN US IN THE 2023

# ISRAEL TOUR

# இஸ்ரேல் பிரயாணம்

மே 1-10

10-நாட்கள்

## 4 தேசங்கள் - இஸ்ரேல், ஜோர்டன், எகிப்து, பாலஸ்தீனம்





- தினமும் அதிகாலை பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் நிறைந்த ஆராதனை
- யோர்தான் நதிகரையில் ஆராதனை
- ஆண்டவர் இயேசு ஊழியம் செய்த இடங்கள்
- அவர் அற்புதம் செய்த புண்ணிய ஸ்தலங்கள்
- கெத்செமனே தோட்டத்தில் ஜெப நேரங்கள்
- பத்து கற்பனைகளை பெற்ற சீனாய்மலை
- கலிலேயா கடலில் தேவனை துதித்தல்
- நைல் நதியில் படகு சவாரி

**எங்களோடு புனித பயணத்திற்கு வாருங்கள்**

12 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு சலுகை

9442800449

தொடர்புக்கு - 9442800449, 9442800447, 9498000449.

உங்களுடைய PASSPORT COPY அனுப்பி முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.
(சென்னையில் இருந்து புறப்பட்டு சென்னை வரும் வரை அனைத்து செலவுகளும் உட்பட)

Tour Arranged By
Bro. L. Vincentraj
Jesus Lives Ministries
Madurai



# தேவன் ஒளியாயிருக்கிறார்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் சகோதரிகளுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். இருள் சூழ்ந்த இவ்வுலகத்திற்கு ஆண்டவர் இயேசு ஒளியாக வந்தார். எப்படி இருள் சூழ்ந்த உலகம் என்று சொல்கிறீர்கள்? ஒவ்வொரு நாளும் இருள் வந்தும், காலை ஒளி வந்து விடுகிறதே, பகலெல்லாம் வெளிச்சத்தில் தானே இருக்கிறோம் என்றால் பகலில் வாழ்ந்தாலும் இருளின் கிரியைகள், அந்தகாரத்தின் கிரியைகள் ஒவ்வொருவரையும் சுற்றி சூழ்ந்திருக்கிறது. அதன் நடுவில் 1 யோவான் 1:5-ல் தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை. இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது என்று வேதத்தில் வாசிக்கிறோம். நம்முடைய தேவன் ஒளியாயிருக்கிறார் யோவான் 1:1-5 வரை வாசித்தால் ஆதியிலே இருந்த தேவன் அவர்தான், சகலத்தையும் வார்த்தையாலே உண்டாக்கினார். அவருக்குள் ஜீவன் இருந்தது. அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது. இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை. 9-ஆம் வசனத்தில் உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி, அவர் இயேசுவே. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார், அப்பொழுது ஆழத்தின் மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் தண்ணீரின் மேல் அசைவாடிக் கொண்டிருந்தார். எரேமியா 4:23-ல் பூமியைப் பார்த்தேன், அது ஒழுங்கின்மையும், வெறுமையுமாயிருந்தது. வானங்களைப் பார்த்தேன், அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது என்று பார்த்து ஒளியில்லாதிருக்கிற பூமியில் வெளிச்சம் உண்டாகக்கடவது என்று வெளிச்சத்தை, ஒளியை ஆண்டவர் சிருஷ்டித்தார் இயேசு பிறந்த போது யூதேயா நாட்டிலுள்ள மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி தங்கள் மந்தையை காத்துக் கொண்டிருக்கும் போது கர்த்தருடைய மகிமை அவர்களைச்சுற்றிலும் பிரகாசித்தது. இயேசுவை ஆலயத்தில் பெயர் வைக்க எடுத்துச் செல்லும் போது சிமியோன் தேவ ஆவியின்

ஏவுதலால் ஆலயத்தில் வந்து குழந்தையைக் கையில் ஏந்தி லூக்கா 2:30-ல் புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது என்றான். இயேசு இந்த உலகிற்கு ஒளியாய் வந்திருக்கிறார் என்று அறிவித்தான். இயேசு கலிலேயா கடலேரமாய் நடந்து வருகிற போது இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள், மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று மத் 4:15-ல் வாசிக்கிறோம். இயேசு தமது சீடர்களோடு தனித்திருக்கும்படி மலையின் மீது ஏறினபோது அவர்களுக்கு முன்பாக அவர் மறுரூபமானார், அவர் முகம் சூரியனைப் போல பிரகாசித்தது. அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப் போல வெண்மையாயிற்று. மத் 17:5-ல் ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்கு செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. யோவான்ஸ்நானகன் யோவான் 1:7,8-ல் கிறிஸ்துவுக்கு முன் தேவனால் அனுப்பப்பட்டு வந்தவன். அவன் அந்த ஒளியல்ல, அந்த ஒளியைக் குறித்து சாட்சி கொடுக்க வந்தவனாயிருந்தான் என்று யோவான் எழுதுகிறார். யோவான்ஸ்நானகனிடத்தில் இயேசுவைக் குறித்து சிலர் கேட்கிறார்கள் அப்பொழுது யோவான் 3:28-ல் நான் கிறிஸ்து அல்ல, அவருக்கு முன் அனுப்பப்பட்டவன் என்று சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம். இயேசு தான் அந்த ஒளி, நான் அல்ல. நான் அந்த ஒளியைக் குறித்து சாட்சி சொல்ல அனுப்பப்பட்டவன் என்றான். இயேசு ஒளியாயிருக்கிறார் அவரில் எவ்வளவேனும் இருளில்லை. யோவான் 8:12-ல் இயேசு ஜனங்களை நோக்கி நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான் என்றார். நானே உலகத்தின் ஒளி, என்னைப் பின்பற்றி சென்றால் அவன் இருளில் நடக்கமாட்டான் ஜீவ ஒளியைப் பெறுவான் என்று சொன்னார் இயேசு.

## ஒளியினிடத்தில் வாருங்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து உலகத்திற்கு ஒளியாக வந்திருந்தும், பூமிமுழுவதும் இருளும், இருளின் கிரியைகளும் சூழ்ந்திருக்கிறதே, யோவான் 3:19-21 வரை வாசித்தால் ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால், அவர்கள் ஒளியைப் பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினை தீர்ப்புக்கு காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான். தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்திற்கு வராதிருக்கிறான். சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்கு முன்பாக செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான் என்று இயேசு சொன்னார். மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாய் இருப்பதால், பொல்லாங்கு செய்கிற எந்த மனுஷனும் ஒளியிடம் வராதிருக்கிறான். ஒரு பணக்கார வாலிபன் இயேசுவிடம் வந்து நான் நித்தியஜீவனை அடைவதற்கு எந்த நன்மையை செய்ய வேண்டும் என்று கேட்டபோது ஆண்டவர் கற்பனைகளை கைக்கொள் என்றார். நான் சிறுவயது முதல் அதைக் கைக்கொள்கிறேன், இன்னும் என்னிடத்தில் என்ன குறைவு இருக்கிறது என்றான். உன்னிடத்தில் உள்ளதை தரித்திரருக்கு கொடு என்ற போது அவன் மிகுந்த ஆஸ்தி உள்ளவனாயிருந்தபடியினால் துக்கத்தோடே போய் விட்டான். ஒரு பார்பர் ஷாப்பில் முடி வெட்டும்படி ஒரு தேவமனிதன் போய் இருந்தார்.

> “சத்தியத்தின்படி செய்கிறவனோ தன் கிரியைகள் தேவனுக்கு முன்பாக செய்யப்படுகிறதென்று வெளியாகும்படிக்கு ஒளியினிடத்தில் வருகிறான் என்று இயேசு சொன்னார்.”

முடிவெட்டும் மனிதன் கடவுளை நம்பாத நாத்திகனாய் இருந்தான். கடவுள் என்பவர் இல்லை, இருந்தால் ஏன் இந்த பூமியில் கஷ்டப்படுகிறவர்கள் இருக்கிறார்கள். ஏழை, பணக்காரன், ஏற்றதாழ்வு இதெல்லாம் கடவுள் இருந்தா இருக்குமா? என்று காரசாரமாய் பேசிக் கொண்டிருந்தான். இந்த தேவ மனிதருக்கு கடவுள் இருக்கிறார் என்று எப்படி சொல்வதென்று புரியவில்லை. மனதிற்குள் ஜெபித்துக் கொண்டிருந்தார். வேலை முடிந்தது வெளியே போக கதவை திறந்தார். அங்கே கண்ணாடிக் கதவுக்கு வெளியே ஒரு மனிதன் மனநிலை பாதிக்கப்பட்டவனாய் தலைமுடி நீளமாய் வளர்ந்திருந்தது. காலில் பிய்ந்து போன செருப்பு அணிந்து தாறுமாறாய் நடந்து போய்க் கொண்டிருந்தான். அவனைப் பார்த்ததும் இவருக்குள் பளிச்சென்று ஒரு ஒளி, திரும்பி வந்து முடிவெட்டுகிற அந்த மனிதனைப் பார்த்து இந்த உலகத்தில் முடி வெட்டுகிறவன் இல்லை. இல்லவே இல்லை என்று சத்தமாய் சொன்னார். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. சற்று நேரத்துக்கு முன்பு தான் என் முன்னால் அமர்ந்து முடி வெட்டி சென்றார். இப்போதுமுடிவெட்டுகிறவன் உலகத்திலேயே இல்லை என்கிறாரே! என்ன ஆயிற்று இவருக்கு என்று விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த அவரிடம் கதவுக்கு வெளியே முடி நீளமாய் வளர்ந்து சென்று கொண்டிருந்த மனிதனைக் கண்டுபிடித்து முடிவெட்டுகிறவன் இந்த உலகத்தில் இருந்தால் ஏன் இந்த மனிதன் நீளமான முடியுடன் நடமாடுகிறான் என்றார். அதற்கு அவன் இதென்னயா! ரோட்டில் போகிற, வருகிறவனுக்கெல்லாம் நான் முடிவெட்ட முடியுமா? யார் என்னிடம் வந்து அமர்ந்து, என்னைப் பார்த்து முடிவெட்டி விடுங்கள் என்று சொல்லுகிறார்களோ அவர்களுக்குத் தான், நான் உதவ முடியும் என்றான். உடனே அந்த தேவ மனிதர் அப்படித்தான் இந்த உலகில் தேவன் இருக்கிறார். யார் அவரிடம் வந்து, அவரை விசுவாசித்து, அவர் உதவியை நாடுகிறோமோ அவர்களை அவர் கைவிடுவதில்லை. இந்த உலகத்தில் உள்ள எந்த மனுஷனையும் பிரகாசிக்கப்பண்ணுகிற மெய்யான ஒளி இயேசு என்று அவர் அறிவித்து சந்தோஷமாய் சென்றார். உண்மையாய் சத்தியத்தின்படி செய்கிறவன் ஒவ்வொன்றிலும் தேவனுக்குப் பிரியமாய் நடக்க ஒளியினிடத்தில் வருகிறான். தன் தவறை, தவறான வாழ்வை உணர்ந்த இளையமகன், கெட்டகுமாரன் தன் தகப்பனிடத்தில் தன்னைத் தாழ்த்தி வந்துவிட்டான். தகப்பன் அவனைத்தள்ளவில்லை, அவனைத் தண்டனைக்குள்ளாக்கவில்லை. ஆக்கினையிலிருந்து அவனை விடுவித்தார். அந்த தேவன் இன்றைக்கு அவரிடம், ஒளியிடம் வருகிற ஒவ்வொருவரையும் பிரகாசிக்கச் செய்வார். எனவே இயேசுவாகிய ஒளியினிடத்தில் வாருங்கள்.

> “இந்த உலகத்தில் உள்ள எந்த மனுஷனையும் பிரகாசிக்கப்பண்ணுகிற மெய்யான ஒளி இயேசு”

## ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்

விசுவாசம் தான் நம்முடைய வாழ்வில் பலத்த நன்மைகளை கொண்டு வருகிறது. விசுவாசம் இல்லாமல் நாம் எந்த நன்மைகளையும் பெற முடியாது. நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். யோவான் 12:36-ல் ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்று இயேசு சொன்னார். யோவான் 12:46-ல் என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெனும் இருளில் இராதபடிக்கு நான் உலகத்தில் ஒளியாக வந்தேன். நாம் ஒளியின் பிள்ளையாகும்படி அவரிடம் விசுவாசமாயிருக்க வேண்டும் என்று இயேசு சொல்கிறார். நாம் அவரிடம்

விசுவாசமாயிருக்கும் போது அவருடைய பிள்ளையாகிறோம். நாம் விசுவாசிக்கும் போது இருளில் இருப்பதில்லை. காரணம் நமக்கு ஒளியாக அவர் வந்தார். இருள் போன்ற பாவங்கள், துன்பங்கள், சோதனைகள் நமக்கு எதிரிட்டு வரும்போது அவர் நமது ஒளியாயிருந்து நம்மைக் காப்பாற்றி, அந்த சூழ்நிலைகளுக்கு நம்மைத் தப்புவிப்பார்.யோவான் 3:18-ல் அவரை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால் அவன் ஆக்கினை தீர்ப்புக்குட்பட்டாயிற்று. நினிவே ஜனங்களின் பாவம் பெருகின போது அவர்களுக்கு ஒரு ஆக்கினை, ஒரு தண்டனை நியமிக்கப்பட்டது. ஆனால் கர்த்தர் யோனாவை அனுப்பி இந்த செய்தியை சொன்ன போது யோனா 3:5-ல் அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசம் செய்யும்படி கூறினார்கள். பெரியோர் முதல் சிறியோர் வரை இரட்டுடுத்திக் கொண்டார்கள். ராஜாவும், ஜனங்களும் தேவனை விசுவாசித்து, தங்களைத் தாழ்த்தி, இரக்கத்தை பெற்று விட்டார்கள். அழிவா? அது வரும் போது பார்க்கலாம் என்று மெத்தனமாக இருக்கவில்லை தேவனை விசுவாசித்தார்கள்.



இந்த அழிவுக்கும், தண்டனைக்கும், ஆக்கினைக்கும் அவர் நம்மை விடுவித்துக் காப்பார் என்று விசுவாசித்து நன்மையைப் பெற்றார்கள். எனவே தேவனை விசுவாசியுங்கள். ரோமர் 13:12-14 வரை வாசித்தால் இரவு சென்று போயிற்று பகல் சமீபமாயிற்று, ஆகையால் அந்தகாரத்தின் கிரியைகளை நாம் தள்ளிவிட்டு, ஒளியின் ஆயுதங்களை தரித்து கொள்ளக்கடவோம். துர்இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தரித்துக் கொள்ளுங்கள் என்று பவுல் எழுதுகிறார். இரவில், இருளில் இருப்பவர்கள் அநேக தவறுகளை செய்வார்கள். ஆனால் பகலில் யாரும் பார்த்து விடுவார்கள் என்று சற்று கவனமாய் நடப்பார்கள். அதனால் தான் பவுல் பகலிலே நடக்கிறவர்களைப் போல சீராய் நடக்கக்கடவோம் என்கிறார். நாம் பகலின் பிள்ளைகள், ஒளியின் பிள்ளைகள் இருள் நம்மை சூழ்வது போல வரலாம், அந்த நேரம் இயேசுவை விசுவாசித்து ஜெபம் பண்ணுங்கள். இந்த அந்தகாரம் என்னைச் சூழக்கூடாது, என் கண்களில் இந்த ஒளி, செவிகளில், இருதயத்தில், வாயின் வார்த்தைகள், கிரியைகள் எல்லாவற்றிலும் ஒளியின் ஆயுதங்கள் என்னில் வெளிப்படட்டும். இருளின் ஆயுதங்கள் என்னை விட்டு விலகி அழிந்து போகட்டும் என்று ஜெபியுங்கள். சங் 4:6-ல் கர்த்தாவே! உம்முடைய சமூகத்தின் ஒளியை எங்கள் மேல் பிரகாசிக்கப்பண்ணும் என்றான். 2 கொரி 4:6-ல் இருளில் இருந்து வெளிசத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும் பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். அதற்கு முன்பாக மேலே 2 கொரி 4:4-ல் தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான் என்றான். பிசாசு நம்மை, நம் மனதை

இருளாக்கி குருடாக்குகிறான். ஆனால் கிறிஸ்துவின் மகிமையான தேவனுடைய சாயலாயிருக்கிற சுவிசேஷ ஒளி, வேதவசனமாகியஒளி நம் இருதயங்களில் பிரகாசிக்கிறது. வேததியானத்தில் உறுதியாய் இருந்து தேவனை விசுவாசியுங்கள்.

## ஒளியை அறிவியுங்கள்

உயிர்த்தெழுந்த இயேசு மகதலேனா மரியாளிடம் நீ போய் சகோதரரிடம் நான் தேவனிடத்திற்கு ஏறிப் போகிறேன் என்று சொல் என்றார். மாற்கு 16:15-ல் நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று இயேசு சொன்னார். 1பேதுரு 2:9-ல் நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரிய கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்கு சொந்தமான ஜனமாயும் இருக்கிறார்கள் என்று பேதுரு சொல்கிறார். இயேசுவை, ஒளியை அறிவிப்பது நமதுபணி. அதற்காக நாம் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். சவுல் இயேசுவின் ஜனங்களை துன்பப்படுத்தி, அவருக்கு எதிர்த்து நடந்தவன். அப் 9:3-ல் அப்படி அவன் பிரயாணப்பட்டு போகிற போது சடுதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது. அதை அவன் விவரித்து சொல்லும் போது அப் 22:11-ல் அந்த ஒளியின் மகிமையினாலே நான் பார்வை அற்றுப்போனபடியினால் என்னோடு இருந்தவர்களால் கைலாகு கொடுத்து வழிநடத்தப்பட்டுத் தமஸ்குவுக்கு வந்தேன் என்றான். அனனியா தேவனால் அனுப்பப்பட்டு ஜெபம் பண்ணின போது அவன் கண்கள் திறந்தது. இயேசுவுக்கு தன் வாழ்வை அர்ப்பணித்தான். அப் 9:20-ல் தாமதமின்றி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களில் பிரசங்கித்தான். அப் 26:18-ல் புறஜாதியார், அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவ மன்னிப்பையும், பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தை விட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களை திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்று பவுலை ஒளியை அறிவிக்க அனுப்பினார். நம்மையும் அதற்கு தான் தேவன் அழைத்திருக்கிறார். ஏசாயா 49:6-ல் யாக்கோபின் கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது. நீர் பூமியின் கடைசி பரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைப்பேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். புறஜாதிகளுக்கும், இஸ்ரவேலுக்கும், பூமியின் கடைசி பரியந்தமும், என்னுடைய இரட்சிப்பை அறிவிக்க ஜாதிகளுக்கு, கோத்திரங்களுக்கு தேவன் நம்மை ஒளியாக பயன்படுத்த விரும்புகிறார். இந்த ஒளியை அறிவியுங்கள். இயேசுவை சொல்லுங்கள். ஒளியாய் இருக்கிற தேவன் தாமே இதை வாசிக்கிற ஒவ்வொரு உள்ளங்களிலும், இல்லங்களிலும் ஒளியாய் பிரகாசித்து இருளை நீக்கி ஆசீர்வதிப்பாராக!.

“நீ அவர்களுடைய கண்களை திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்று பவுலை ஒளியை அறிவிக்க அனுப்பினார். நம்மையும் அதற்கு தான் தேவன் அழைத்திருக்கிறார்.”

ஜெப உதவிக்கு

1800 309 9333

+91 944 28 00 447

+91 944 28 00 449

மின்னஞ்சல்

Prayers@jesuslives.in

# School of EVANGELISM

## சுவிசேஷ பயிற்சி பள்ளி

இருளில் இருக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள், மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று சொல்லப்பட்டுள்ள தேவ வர்த்தையின்படி நமது வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் வைத்து கடந்த அக்டோபர் மாதம் 21-ஆம் தேதி மாலை ஆயத்த ஜெபத்துடன் ஆரம்பித்து 27-ஆம் தேதி வரை சுவிசேஷ பயிற்சி முகாமை நடத்த தேவன் கிருபை செய்தார். இந்திய தேசத்தின் பல பகுதிகளிலிருந்து சுவிசேஷ அழைப்பைப் பெற்ற, சுவிசேஷ பாரமுள்ள தேவபிள்ளைகளை தேவன் கூட்டிச் சேர்த்தார். இந்த சுவிசேஷ பயிற்சி முகாமைக் குறித்து தேவன் வைத்த திட்டம் நிறைவேற கூடாது என்பதற்காக பல சூழ்ச்சிகளை சாத்தான் செய்தாலும் அவன் தந்திரங்களையும், சூழ்ச்சிகளையும் தேவன் அழித்துப்போட்டார். இயற்கை சூழ்நிலையை சாதகமாக்கினார். பயிற்சி முகாமிற்கு வந்த ஒவ்வொருவரோடும் தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் திட்டமாகவும், தெளிவாகவும் பேசி, அவர்கள் அழைப்பை உறுதிப்படுத்தினார். அவர்கள் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் உயிர்ப்பிக்கப்பட்டு, மறுரூபமடைய தேவன் கிருபை செய்தார். சகோதரர். வின்சென்ட்செல்வகுமார் அவர்கள் முதல்நாள் முதல்பகுதியை ஜெபத்துடன் ஆரம்பித்து தேவ ஆவியானவர் சொல்லச் சொன்ன காரியங்களை கற்றுக் கொடுத்தார்கள். சுவிசேஷம் ஏன் சொல்ல வேண்டும், சொல்லவிட்டால் என் நடக்கும் என்பதைப்பற்றி தெளிவாக போதித்தார்கள். மேலும் சகோதரர். வின்சென்ட்ராஜ், சகோதரி. கலாவின்சென்ட்ராஜ், பாஸ்டர். ஜான்.ke, பாஸ்டர். ராஜாசேகர், சகோதரர். ஜான் சகோதரர். வெஸ்லி மேக்ஸ்வெல், டாக்டர். அகஸ்டின் ஆகியோர் தங்கள் அனுபவ சாட்சிகள் மூலம் சுவிசேஷத்தின் பல காரியங்களை கற்றுக்கொடுக்க தேவன் கிருபை செய்தார். இந்த முகாம் சிறப்பாக நடைபெற தங்கள் ஜெபத்தாலும், பொருளாலும், காணிக்கைகளினாலும், உடல் உழைப்பாலும் உதவிய அத்தனை உள்ளங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதிப்பாராக. மேலும் பயிற்சி பெற்றுச் சென்ற ஒவ்வொருவரையும் தேவன் தேசமெங்கும் வல்லமையாக பயன்படுத்தவும், தேசத்தில் இருள் விலகி சுவிசேஷ ஒளி பரவச் செய்ய இன்னும் அநேக சுவிசேஷகர்கள் எழும்பவும், சுவிசேஷ பயிற்சிப் பள்ளிக்காகவும், எங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



# இயேசுவே தேவனுடைய குமாரன் நான் சாட்சி



**அந்தபடியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன்.**
**யோவான் 1:34**

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே உங்கள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்றும், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனுமான (ரோமர் 1:5) நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இஸ்ரவேல் ஜனங்களை கொடுமையாய் ஆண்ட ரோமர் கையினின்று மீட்டு, காப்பாற்றும், இரட்சிக்கும் பிரபுவாகிய மேசியா வருவார் என்று எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த அந்த ஜனங்களின் நடுவே சகரியா என்ற ஆசாரியனுக்கு தேவதூதன் தோன்றி உனக்கு ஒரு குமாரன் பிறப்பான். அவன் பேர் யோவான், அவன் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு அநேகரை தேவனாகிய கர்த்தரிடத்தில் திருப்புவான். கர்த்தருக்கு வழியை, ஜனங்களை ஆயத்தப்படுத்தும்படி அவருக்கு முன்னாக நடந்து போவான் என்று சொன்னான். இதற்குப்பின்பு மிகவும் வயதான சகரியாவின் மனைவி கர்ப்பவதியாகி ஐந்து மாதமும் யாருக்கும் சொல்லாமல், வெளிக்காட்டாமல் இருந்தார்கள். (லூக்கா 1:5-80) அந்த நாட்களிலே தேவதூதன் மரியாளிடத்திலும் தோன்றி நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர்வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள், மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம் லூக்கா (1:31-36) என்றான்.

ஆண்டவர் எலிசபெத்துக்குச் செய்த அதிசயத்தைக் காணவும், தனக்குச் சொல்லப்பட்ட தேவ வார்த்தையை அவர்களுக்குச் சொல்லவும் மரியாள் அவர்களிடத்திற்கு சென்றார். எலிசபெத்தைச் சந்தித்து மரியாள் வாழ்த்தினவுடனே எலிசபெத் வயிற்றிலுள்ள பிள்ளை துள்ளிற்று என்கிறார். எலிசபெத் என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது என்று ஆச்சரியமாய் கூறுகிறதைப் பார்க்கிறோம். பிறக்கப்போகிற தேவனுடைய குமாரனாகிய இயேசுவுக்கு முன்னோடியான தீர்க்கதரிசி தன் மகன் என்பதை திட்டமாய் அறிந்த சகரியா-எலிசபெத் அந்த நம்பிக்கையை, ஊழியத்தை நோக்கி யோவான்ஸ்நானகனை வளர்த்திருப்பார்கள். பரிசுத்த ஆவியில் பலங்கொண்டு இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன் வரும்வரை வனாந்திரங்களிலே அவர் வாழ்ந்திருக்கிறார். அதன்பின் தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் வாழ்க்கையில் என்ன நடக்கப் போகிறது என்பதை பிதாவாகிய ஆண்டவர், ஆவியானவர் மூலம் வெளிப்படுத்தினதை ஜனங்கள் முன் சாட்சியாக கூறினதைத் தான் பார்க்கப்போகிறோம். பொதுவாக நல்ல விஷயங்கள் அல்லது சண்டை, வழக்கு, வாதங்களைப் பற்றி நேரில் கண்ட ஒருவர் மற்றவரிடத்தில் அதைச் சொல்லும் போது அதற்கு நான் சாட்சி என்பார்கள். அதே போல தான் தனக்கு ஆவியானவர் வெளிப்படுத்தின சத்தியத்தைக் குறித்து சாட்சியாகச் சொன்ன யோவானைப் பார்த்து ஆண்டவர் இயேசு சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தான் என்கிறார். யோவான் 5:33. தேவகுமாரனும் சத்தியமுமாகிய இயேசுவை யோவான் ஸ்நானகன் எப்படி சாட்சி சொல்லி வெளிப்படுத்தினார் என்று பார்ப்போமா?

## இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி

மறுநாளிலே யோவான் இயேசு தன்னிடத்தில் வரக்கண்டு இதோ, உலகத்தின் பாவத்தைசுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி, இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான். யோவான் 1:29,36

மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று யோவான் பிரசங்கம் செய்ததை கேட்ட மக்கள் நீர் யார்? என்றார்கள் நான் கிறிஸ்து அல்ல என்றான். பின்னே யார்? எலியாவா? தீர்க்கதரிசியா? என்று கேட்ட பொழுது கர்த்தருக்கு வழியை ஆயத்தம் பண்ண வந்த ஒரு மனிதன் தான் நான். ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் நானே. நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் என்பதை (ஏசாயா 9:6) உங்களுக்கு கூறும், சாட்சியாக சொல்ல வனாந்திரத்திலே கூப்பிடுகிற



சத்தமாய் நானிருக்கிறேன். நான் சிறுகவும், அவர் பெருகவும் வேண்டும், அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்க்கக்கூட எனக்கு தகுதியில்லை என்று தன்னைத் தாழ்த்தி தேவனுடைய குமாரனை மேன்மைப்படுத்தி பேசினார். அதுமட்டுமல்ல சர்வலோகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி இவரே. தேவனுடைய குமாரனாக உயிர்த்தெழப் போகிறவர் என்பதை வாயினால் அறிக்கையிட்டு சாட்சி சொன்னார். அதைக் கேட்ட அவருடைய சீஷர்கள் இயேசுவுக்குப் பின் சென்றார்கள். அவர்களைப் பார்த்து இன்னும் இரண்டு பேர் பின் சென்றார்கள். இயேசு தான் என் இரட்சகர், என்னை பாவத்திலிருந்து காப்பாற்ற வல்லவர் என்பதை இருதயத்திலே நம்பி இயேசுவே என் உள்ளத்திலே வாங்கப்பா பாவத்திலிருந்து விடுதலை பெற முயற்சி

பண்ணுகிறேன் ஆனால் என்னால் முடியலை எனக்கு உதவி செய்யுங்க உங்களை என் தகப்பனாக, இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன் என்று வாயினாலே அறிக்கையிட்டு நீங்கள் சொன்னால் இரட்சிக்கப்படுவீர்கள். (ரோமர் 10:10) அவருடைய நாமத்தை ஏற்றுக்கொண்ட நீங்கள் அவருடைய பிள்ளையாக மாறுவீர்கள். (யோவான் 1:12) அப்பாவை மகிமைப்படுத்தி உங்களை வாலிப நண்பர்களுக்கும், மற்றவர்களுக்கும் இயேசு நல்லவர், உங்களை நேசிக்கிறார், உங்களுக்கு உதவி செய்வார் அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமானவர். அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சாட்சி சொல்லுங்கள். ஆண்டவர் உங்களுக்கு செய்த நன்மைகளை நீங்கள் பெற்ற விடுதலையை வெட்கப்படாமல் தைரியத்தோடு சாட்சியாகச் சொல்லுங்கள். யோவான் ஸ்நானகனை சாட்சியாக நிறுத்தினவர், பயன்படுத்தினவர், உங்களையும் பயன்படுத்துவார். அநேகரை நீதிக்குப்படுத்துகிற நீங்கள் நட்சத்திரங்களைப் போல பிரகாசிப்பீர்கள். நீதி 11:30, தானி 12:31. நீங்கள் சாட்சி சொல்வதைக் கேட்டு நிச்சயம் அநேகர் இயேசப்பாவை பின்பற்றுவார்கள்.

## பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறவர்

நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர். ஆவியானவர் இறங்கி யார் மேல் தங்குவதை நீ காண்பாயோ அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். யோவான் 1:33. யோவான் மனந்திரும்புதலுக்கென்று தண்ணீரினால் ஞானஸ்நானம் கொடுத்த போது இயேசு தம்மிடத்தில் வருவதைக் கண்டு தடைசெய்த யோவானைப் பார்த்து (தேவனுடைய நீதியை) தேவனுடைய குமாரனாகிய நானும் நிறைவேற்றுவதே சரியானது, நல்லது என்றார். அப்படியே யோவானும் ஞான ஸ்நானம் கொடுத்தபோது ஆவியானவர் இயேசுவின் மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி இவரே என்னுடைய நேசகுமாரன் என்று உரைத்ததை கண்ணாரக் கண்டவராகிய யோவான் கூறுகிறார், இவர் தான் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கப் போகிறவர் என்று சாட்சியாக அறிவித்தார். இயேசு என் பாவங்களை அவர் இரத்தத்தால் கழுவினார், இயேசுவே ஆண்டவர், தேவனுடைய குமாரன் என்ற ஞானத்தைப் பெற்ற பிறகு நானும் இயேசுவைப் போலவே பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைக்கிறேன் என்பதற்காக நாம் பெறும் ஸ்நானமே ஞானஸ்நானம். இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றால் சாட்சி சொல்வதோடும், பிசாசின் கிரியைகளை அழித்து (1யோவான்3:7) சாட்சியாக வாழ்வதற்கும், தேவகுமாரன் இயேசு பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப் போகிறார். அதை அவசியம் நீங்கள் பெற வேண்டும் என்பதைத் தான் யோவான் சொல்கிறார்.அப் 9:33. உலகமெங்கிலும் நற்செய்தி பரவினது. இயேசு பிரதியுத்தரமாக ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். யோவான் 3:3. இந்த கடைசி காலங்களில் வாழுகின்ற நானும், நீங்களும் கர்த்தரின் கட்டளைபடி தண்ணீரால் மட்டுமல்ல பரிசுத்த ஆவியினாலும் ஞானஸ்நானம் பெற வேண்டும். நாம் தாகத்தோடு கேட்கும் போது அவர் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?. கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மீதும் என் ஆவியை ஊற்றுவேன் என்றாரே. பரிசுத்த ஆவியின் பெலனால் மட்டுமே நாம் பாவத்தையும், பிசாசின் தந்திரங்களையும் ஜெயிக்க முடியும். தாகத்தோடு கேட்டு ஆவியானவரை பெற்றுக்கொண்டு உங்கள் வீடு, ஊர், உலகத்திலும் சாட்சிகளாய் வாழ கர்த்தர் தாமே உதவி செய்வாராக.



# உண்மையான கிறிஸ்துமஸ் சந்தோஷம்!

**ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!,**
**ஹேப்பி கிறிஸ்துமஸ் ( Happy Christmas )**

கிறிஸ்துமஸ்னவே உங்களுக்கு ஒரே ஜாலி, குஷி தானே! (Half Yearly Leave) ஹாப் இயர்லி லீவு, புது டிரஸ், கிப்ட்ஸ், கேக், பிரியாணி எல்லாம் கிடைக்கும். கிறிஸ்துமஸ் தாத்தாவோடு கேரல்ஸ் எல்லாம் வருவாங்க முக்கியமா வீட்ல எல்லாம் ஸ்டார் கட்டுவாங்க ரொம்ப சந்தோஷமா இருக்குமில்ல. அது நல்லது தான் இந்த சந்தோஷம் எங்கிருந்து Start ஆகும் தெரியுமா?

2000 ஆயிரம் வருஷத்துக்கு முன்னால பரலோகத்திலிருந்த தேவன் மனிதனாய் பெத்லகேம் ஊரிலே, மரியாள் வயிற்றிலே பிறந்தபோது தான்!. இதை தேவதூதன் மேய்ப்பர்களிடம் எப்படி சொன்னான் தெரியுமா? இதோ! எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்னு சொன்னான். ஆமாம் இயேசப்பாவுடைய பிறப்பு நம்ம எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷம் தானே, அதனால் தானே கிறிஸ்துமஸ் வந்துச்சு. இன்னும் இதைவிட பெரிய சந்தோஷம் இருக்கு தெரியுமா....? நமக்காக மனிதனாய் பிறந்த இயேசப்பா நமக்காக பாடுபட்டு, நம்முடைய பாவங்களை போக்குவதற்காக சிலுவையிலே நமக்குப் பதிலாக மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தாங்க, இந்த சந்தோஷமான நற்செய்தியை நம்பி, இயேசப்பா, என் பாவங்களையெல்லாம் மன்னித்து, என் உள்ளத்திற்குள்ள வாங்க இயேசப்பா என்று நாம் கூப்பிட்டால் போதும் அவர் நம்ம உள்ளத்தில் வந்திருவார், இரட்சகராக பிறந்திருவார். நம்ம உள்ளத்திலிருந்து பாவம், பயமெல்லாம் நீங்கி, ஒரு புது சந்தோஷம், நம்பிக்கை வரும் இது தான் உண்மையான கிறிஸ்துமஸ் சந்தோஷம். இப்ப புரியுதா? உங்களுக்கு அந்த சந்தோஷத்தை பெற்றோரோ, பெரியர்களோ, எந்தப் பொருளுமோ தரவே முடியாது





இயேசப்பா இந்த உலகத்தில் பிறக்கிறதற்கு இயேசப்பாவுடைய அம்மா மரியாள் தன் வயிற்றிலே, உள்ளத்திலே இடங்கொடுத்து ஏற்றுக்கொண்டதாலே, என் இரட்சகராகிய என் தேவனில் சந்தோஷமாயிருக்கிறேன்னு சொன்னாங்க. குட்டீஸ் நீங்களும் இயேசப்பாவை உங்க இரட்சகரா, அப்பாவா ஏற்றுக்கொள்வீங்களானால்? உடனே இயேசப்பா அந்த இரட்சிப்பின் சந்தோஷத்தை நிச்சயமாய் தந்திருவார். நீங்க பெற்ற இன்பத்தை உலகத்துக்கும், உங்க Friends -க்கும் சொல்ல மறந்திராதீங்க!. Ok, குட்டீஸ் Next Year சந்திப்போம், Bye!

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா நீங்க என் பாவத்தை மன்னித்து, என் உள்ளத்திற்குள்ள வாங்க, உங்கள என் இரட்சகரா, அப்பாவா ஏற்றுக்கொள்கிறேன். உண்மையான கிறிஸ்துமஸ் சந்தோஷத்தை எனக்கும், என் Friends - க்கும் தாங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது, என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது. லூக்கா 1:46,47 இயேசுவே – இரட்சகர் மத் 1:21.








# சுகமளிக்கும் தேவன் இயேசு

## சகோதரி.மேரி - கரூர்

என் பேரன் மனோவிற்கு பூச்சிக்கொள்ளி மருந்து பாயிசன் ஆகி உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். மருத்துவர்களால் கைவிடப்பட்ட நிலையில் இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு என் பேரனுக்காக ஜெபிக்கக் கேட்டுக் கொண்டேன். சகோதரர் அவர்களும், சகோதரி அவர்களும் ஜெபித்தார்கள் இயேசுவின் இரத்தத்தினால் சுகமும், புதிய ஜீவனும் கிடைக்கும் என்று சொல்லி ஜெபித்தது போலவே இயேசுவின் கிருபையால் என் பேரன் உயிர்பிழைத்து, நல்ல சுகத்தோடு வீட்டிற்குத் திரும்பி வர தேவன் அற்புத சுகத்தை தந்தார். தங்கள் மேலான ஜெப உதவிக்கு மிக்க நன்றி. என் பேரனை சாட்சியாக வாழ வைத்த தேவாதி தேவனுக்கு கோடி ஸ்தோத்திரம்.

## சகோதரி.ஜீடித்மேரி - சென்னை

எனக்கு பல வருடங்களாகவே வயிற்றுப் பிரச்சனை இருந்து கொண்டே இருந்தது. நான் விரும்பும் உணவை என்னால் சாப்பிட முடியாது. மருந்து மாத்திரை எடுத்தால் நிற்கும் பிறகு மீண்டும் வயிற்றுப் பிரச்சனை வந்து விடும். இதனால் மருத்துவர் என்னை ஸ்கேன் எடுக்கச் சொல்லிவிட்டார். நான் மிகவும் பயந்தேன், எந்த பிரச்சனையும் இருக்க கூடாது என்று. என் மகனுக்கும் வாயு பிரச்சனை, நெஞ்சு எரிச்சல் நீண்ட நாட்களாகவே இருந்தது. எங்கள் இருவரின் சரீரசுகத்திற்காக ஜெபிக்குமாறு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தங்களிடம் ஜெபஉதவியை நாடினேன். நீங்களும் எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தீர்கள். ஜெபத்திற்குப் பின்பு நான் ஸ்கேன் எடுத்துப் பார்த்த போது ஒன்றும் இல்லை எல்லாம் நார்மலாக இருக்கிறது என்று ரிசல்ட் வர தேவன் உதவி செய்தார். என் மகனுக்கு மாத்திரையிலேயே சரியாகிவிடும் என்று சொல்லிவிட்டார்கள். ஆண்டவருக்கு கோடான கோடி நன்றி.

## சகோதரர்.மாரிசாமி - தூத்துக்குடி

கடந்த நாட்களாகவே நான் மிகவும் சோர்ந்து போய் என்ன? வாழ்க்கை என்று புலம்பிக் கொண்டிருந்தேன் அப்பொழுது இயேசுவை தினம் பார்க்கிறேன் என்ற மாதஇதழ் என் கைகளில் கிடைத்தது. அதில் இருந்த தேவ செய்தியை நான் வாசித்த போது சோர்ந்து போய் இருந்த என்னை அந்த வார்த்தைகள் தேற்றியது. நீ மண்ணாயிருக்கிறாய் என்ற தலைப்பில் இருந்த செய்தியின் மூலம் நான் யார் என்பதை உணர முடிந்தது. அதன் பிறகு எனக்குள் இருந்த கலக்கம் நீங்கியது, சோர்வு மாறியது. தேவனை இன்னும் அதிகமாக சார்ந்து கொள்ள தேவன் எனக்கு கிருபை செய்தார். இந்த தேவ வார்த்தையின் மூலம் என்னை பலப்படுத்திய தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

भारतीय डाक
India Post

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# நடப்பு ★★★★★★ செய்திகள்

## ஆஸ்திரேலியாவில் பூமிக்கு அடியில் வாழும் மக்கள் ஏன் தெரியுமா?

கூபர் பெடி, ஆஸ்திரேலியாவின் ஒபல் எனப்படும் தாதுக்கல் சுரங்கத் தொழிலின் மையமாக உள்ளது. இப்போது, அங்கு வசிப்பவர்களில் 60% பேர் நிலத்துக்கு அடியில் தான் வாழ்கின்றனர். மேலும், இந்த நகரம் வளம்குன்றா வாழ்க்கையைப் பொறுத்தவரை முன்னணியில் உள்ளது. கொப்புளிக்கும் வெப்பநிலையோடு, நாட்டின் தொலைதூரத்தில், எளிதில் அணுகமுடியாத வகையில் அமைந்துள்ளது. வழக்கமாக உள்ளூர் ஒபல் தாதுக்கல் சுரங்கங்களில் இருந்து மெல்லிய சிவப்பு தூசியால் இந்த நகரம் மூடப்பட்டிருக்கும். அங்கு வசிக்கும் மக்கள் படைப்பாற்றல் கொண்டவர்கள். ஆனால், குளிர்ச்சியான, மிகவும் இணக்கமான காலநிலைக்குச் செல்வதைவிட, அங்கு வசிக்கும் மக்கள் நிலத்தடி சமூகத்தை உருவாக்கி, தோண்டப்பட்ட குழிக்குள் வீடுகள் முதல் தேவாலயங்கள் வரை அனைத்தையும் உருவாக்கினார்கள். இன்று, கூபர் பெடியில் வாழும் 3,500 உள்ளூர் மக்களில் 60% பேர் நிலத்தடியில் வாழ்கின்றனர். 'கூபர் பெடியில் 60 சதவீதம் மக்கள் நிலத்திற்கு அடியில் தான் வாழ்கின்றனர். அவர்கள் அறிவாளிகள். நான் 53 ஆண்டுகளாக தாதுக்கல் சுரங்கத் தொழிலில் இருக்கிறேன். இன்னமும் இந்தத் தொழிலைச் செய்து வருகிறேன். நிலத்தடியில் வாழத் தொடங்கிவிட்டால், நீங்கள் மீண்டும் மேற்பரப்பில் ஒரு வீட்டில் வாழ முன்வரவே மாட்டீர்கள். வெப்பம், குளிர்ச்சிக்கான கருவிகள் தேவைப்படாது. இது மிகவும் அமைதி நிறைந்தது. 2018ஆம் ஆண்டு கோடையில் நாங்கள் 53 செல்ஷியஸ் வெப்பநிலையை எதிர்கொண்டோம்,' என்கிறார் ஜான் டன்ஸ்டன். கூபர் பெடி நகரத்தின் தோற்றுவாயும்
நிலத்தடியில் தான் உள்ளது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பாக, ஒரு வாலிபர் அந்தப் பகுதியில் ஒபல் எனப்படும் தாதுக்கல் துண்டு ஒன்றைக் கண்டுபிடித்தார். அப்போதிருந்து, சுரங்கத் தொழில் செய்பவர்கள் இந்தப் பகுதிக்கு வரத் தொடங்கினார்கள். விரைவில், அந்தப் பகுதி
சிவதாதுக்கற்களுக்கான உலகின் மிகப்பெரிய ஆதாரமாக உருவெடுத்து, கூபர் பெடி நகரம் பிறந்தது. 1970 மற்றும் 80களில் அதன் உச்சத்தில் இருந்த இந்நகரம், ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுரங்கங்களைக் கொண்டிருந்தது. இன்று சுமார் 100 மட்டுமே உள்ளன. 'கடுமையான வெப்பம் நிலவியது. வடக்கில் இருந்து காற்று வீசும்போது உலைக்களத்தைப் போல் இருக்கும். என் வீடு நான்கு பெட்ரூம்களை கொண்டது. முன்னர் பயன்படுத்திய சுரங்கத்தில் இருந்து இதை உருவாக்கினோம்,' என்கிறார் கூபர் பெடியின் குடியிருப்பாளர்களில் ஒருவரான ஜேசன் ரைட். 2017ஆம் ஆண்டு கூபர் பெடி புதிய ஹைப்ரிட் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டத்தை
அறிமுகத்தியது. 2018ஆம் ஆண்டில் அந்தத் திட்டத்தின் மூலம், தனது 70% பகுதிகளுக்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம் மின்சாரம் வழங்கியது.'கூபர் பெடி மிகவும் தனித்துவமானது. பரந்த நிலப்பரப்பில் பிரமாண்டமான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் கட்டமைப்பை உருவாக்க முடியும். இங்குள்ள காலநிலையும் அதற்கு ஒத்துழைக்கிறது. இங்கு நிறைய சூரிய ஒளி கிடைக்கிறது.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai


செம்பட்டியில்
உபவாச
ஜெபம்
Evg.Kala Vincentraj
Evg.L.Vincentraj
இடம் வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்
தொடர்புக்கு 94428 00449, 94428 00447
டிசம்பர்
10
@10:00 AM
மதுரையில்
எழுப்புதல்
உபவாச
ஜெபம்
Jesus Lives MINISTRIES
டிசம்பர்
17
சனிக்கிழமை
9:30am to 2:00pm
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,
PRC Depot அருகில், மதுரை
Evg.L.Vincentraj
Evg.Kala Vincentraj
தொடர்புக்கு
94428 00449
94428 00447

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.